# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

**செய்தி மடல்**
**22.10.2022**

**கோவிட்-19 சம்பந்தமான அறிவுறுத்தல்கள் :**

- ✓ பாடசாலை வளாகத்தினுள் உள்நுழையும் -
  - ☑ 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இரண்டு கோவிட் தடுப்பூசி பெற்றிருத்தல் நன்று.
  - ☑ மருத்துவர் பரிந்துரைக்கும் அனைவரும் எப்போதும் முகக்கவசம் அணிந்திருத்தல் நன்று.
- ✓ பாடசாலை வாயிலில் கூட்டம் கூடுவதை தவிர்த்து சமூக இடைவெளி அறிவுறுத்தல்களை பின்பற்றவும்.
- ✓ நீங்கள் சுகவீனமுற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் பாடசாலை வருவதை தவிர்த்துக்கொள்ளவும். கோவிட் தொற்று அறிகுறியாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் மாநில மற்றும் மத்திய அரசின் கோவிட்-19 அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

**“பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலோ கிடந்து சங்கத்து**
**இருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை**
**நெருப்பிலோ நின்று கற்றோர் நினைவிலே நடந்துஓ ரேன**
**மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்”** என தமிழ்த் தாயை பாடி உலகிலேயே மொழியை கடவுளாக போற்றும் தமிழர்கள் நாம். இச்சிறப்புப்பெற்ற எமது மொழியை எம் சிறார்களுக்கு கற்பிக்கும் தலையாய கடமையை செவ்வனே செய்யும் மவுண்ட் றூயிட் தமிழ் கல்வி நிலையம் தமிழை மட்டுமன்றி மாணவர்களை பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருவதுடன் அவர்களை ஒரு பொறுப்பு வாய்ந்த மாணவ சமூதாயமாகவும் உருவாக்கிவருகின்றது என்றால் மிகையாகாது. அது மட்டுமன்றி தற்பொழுது மாணவர்களை HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இச்சிறப்பு பெற்ற எமது கல்வி நிலையத்தில் தமிழ் கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

**பாடசாலை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு :**

## 1. *பாடசாலை விபரம்*

வகுப்புகள் / **Classes :** முன்பள்ளி முதல் ஆண்டு 12 HSC தமிழ் வரை / **Preschool to HSC Tamil**
நடைபெறும் இடம் / **Centre Location :** **Colyton Public School**, 43 - 81 Nelson Street, Mount Druitt, NSW 2770
மின்னஞ்சல் / **Email :** mtdruitttsc@gmail.com இணையத்தளம் /**Website :** www.mtsc.org.au
முகப்புத்தகம் / **Facebook :** https://www.facebook.com/groups/374995486577634/
கைப்பேசி / **Mobile Phone :** 0449 892 066

## 2. *2022ம் ஆண்டு பாடசாலையின் முக்கிய திகதிகள்*

| | |
|---|---|
| நான்காம் தவணை : | 15.10.2022 முதல் 17.12.2022 வரை * |
| ஆண்டிறுதிப் பரீட்சை : | 19.11.2022 |
| ஆண்டிறுதி மாணவர் தேர்ச்சி அறிக்கை : | 10.12.2022 |
| ஒளி விழா, பரிசளிப்பு விழா மற்றும் புதிய செயற்குழு தெரிவு : | 18.12.2022 |

## 3. *வருடாந்த பரிசளிப்பு விழா 2022* (18.12.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.30 மணி முதல்)

Maps

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் நத்தார் கொண்டாட்டமும் இராப்போசன விருந்தும் அரசாங்க அறிவுறுத்தல்களுக்கு அமைய சுகாதார நடைமுறைகள் மற்றும் கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டு எதிர்வரும் டிசம்பர் மாதம் 18ம் திகதி (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு **Erskine Park Community Hall (57 Peppertree Drive, Erskine Park NSW 2759)** மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரும் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிப்பதுடன் நீங்கள் பாடசாலை வாகன தரிப்பிடத்தை பயன்படுத்தலாம் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## 4. *ஆண்டிறுதிப் பரீட்சை 2022*

மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகள் 19.11.2022 அன்று முதல் வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்படும். இதில் வாசிப்பு, கேட்டு கிரகித்தல், பேசுதல், எழுத்துப்பரீட்சை என்பன அடங்கும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும். அத்துடன் ஆண்டிறுதி மாணவர் தேர்ச்சி அறிக்கை 10.12.2022 அன்று வழங்கவும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

### 5. HSC பிரத்தியோக வகுப்பு

HSCல் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் தற்போது மேலதிகமான ஆசிரியருடன் பிரத்தியோக வகுப்புக்களை ஆரம்பித்துள்ளதுடன் பெற்றோர்களாகிய நீங்கள் உங்களது பிள்ளைகளை HSCயில் தமிழை ஒரு பாடமாக எடுத்து எமது தேன்மதுர தமிழ் மொழியை இவ்அவுஸ்திரேலியக் கண்டத்தில் பரவும்வகை செய்திட வேண்டி நிற்கின்றோம்.

### 6. கலை விழா 2022

24.09.2022 அன்று நடைபெற்ற எமது பாடசாலைக் கலை விழா அனைவருக்கும் பெருவிருந்தாக அமைந்திருந்தது. கடந்த இரண்டு வருடங்களுக்குப் பிறகு மாணவர்களது இவ்விழா இடம்பெற்று பற்பல மாணவர்களது கன்னி நிகழ்வுகளும் மேடையேறி அனைவரதும் பராட்டைப் பெற்றுத்தந்தது. இவ்விழாவில் கலந்து சிறப்பான ஆற்றலை வெளிப்படுத்திய மாணவ செல்வங்களுக்கும் அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் அதனை அழகுற வடிவமைத்து வழங்கிய ஆசிரியர்களுக்கும் பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

### 7. வாணி விழா (சரசுவதி பூசை)

கடந்த 15.10.2022 அன்று பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்ற வாணி விழாவில் நிகழ்வில் கலந்து சிறப்பித்த மாணவ செல்வங்களுக்கும் அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் அதனை திறம்பட தொகுத்து வழங்கிய ஆசிரியர்களுக்கும் பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

### 8. பெற்றோர் கலந்துரையாடல்

எதிர்வரும் **05.11.2022 சனிக்கிழமை அன்று பி.ப. 2.15 மணிக்கு** நடைபெற இருக்கும் முக்கிய கலந்துரையாடலுக்கு சகல பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 9. இனிய தமிழ் மாலை 2022 (நவம்பர்)

தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்பினால் வருடந்தோறும் நடாத்தப்படும் கலாநிதி இளங்கோ வேந்தனார் ஞாபகார்த்த புலமைப் பரீட்சையில் தோற்றி அதிவிசேட, விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 06ம் திகதி (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை Girraween Public School பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### 10. பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்

இதுவரை உங்கள் பிள்ளைகளுக்கான கடந்த வருட பாடசாலைக் கட்டணம், இந்த வருடத்திற்கான பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை செலுத்த தவறியவர்கள் விரைவாக அதனை செலுத்தி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். கட்டணத்தை செலுத்த நீங்கள் கீழ்வரும் பாடசாலை வங்கிக்கணக்கினையும் பயன்படுத்தலாம் என்பதுடன் தவறாது மாணவர் பெயர், வகுப்பு விபரத்தையும் அதில் பதிவிடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்வி நிலைய பொருளாளர் திரு. சிவகுமார் தேசிங்கு (தொலைபேசி இல: 0401 955 912) அல்லது உப பொருளாளர் திரு. தங்கவேல் மயூரதன் (தொலைபேசி இல : 0421 571 201) அவர்களை தொடர்பு கொள்ளவும்.

(Name: **Mount Druitt Tamil Study Centre** (Please leave transfer note with your kids name and class as reference.)
Account Number with BSB: **112 879 043215976**

### 11. 2023ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு

எமது பாடசாலையின் 2023ம் ஆண்டின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக பங்குபற்ற விருப்பமுடையவர்கள் எமது செயலாளர் திரு.குலசேகரம் முரளிதரன் அவர்களை தொடர்பு கொண்டு அல்லது பாடசாலை மின்னஞ்சல் முகவரியான mtdruitttsc@gmail.com தங்களது விண்ணப்பப்படிவத்தை கையளிக்குமாறு தங்களை தயவாக கேட்டுக்கொள்கின்றோம். (தொலைபேசி இல : 0433 172 345)

புதிய நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக சேர விரும்புபவர்களுக்கான விண்ணப்பப்படிவத்தை இந்த செய்திமடலுடன் இணைத்துள்ளோம். தங்களுக்கு தேவைப்படுமிடத்து வலைத்தளத்தின் வளங்கள் பகுதியிலிருந்தும் இதனை நீங்கள் தரவிறக்கம் செய்யலாம். விண்ணப்ப முடிவு திகதியான 05.11.2022 மாலை 6 மணிக்கு முன்பாக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை எமது செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இதுவரை காலமும் பாடசாலை நிர்வாகத்தில் பங்குகொள்ளாத பெற்றோர்கள், ஆசிரியர்கள் 2023ம் ஆண்டின் பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவும்படி தங்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

### 12. 2023ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு அறிமுகம்

எமது பாடசாலையின் 2023ம் ஆண்டிற்கான பாடசாலை நிர்வாகக்குழுவில் இணைந்தவர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வும் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் இடம்பெற உள்ளது. இந்த வருடம் பாடசாலைக்கு பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியிலும் மாணவர்களை தமிழ் பாடசாலைக்கு அழைத்துவந்த ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் 2022ம் ஆண்டின் நிர்வாகத்தின் சார்பில் நன்றியை கூறிக்கொள்வதுடன் வழமைபோல 2023ம் ஆண்டிற்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை நிர்வாகத்திற்கு தங்களது பூரண ஆதரவினை வழங்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 13. பாடசாலை விடுமுறை

எமது பாடசாலை தவணை நான்கின் கடைசி நாளான 18.12.2022 அன்று பரிசளிப்பு விழாவுடன் நிறைவடைந்து எதிர்வரும் 04.02.2023 சனிக்கிழமை அன்று மீண்டும் புதிய வருடத்திற்கான முதலாம் தவணைக்காக திறக்கப்படும் என்பதனையும் உங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலைய நிர்வாகம்.



"தொண்டு செய்வாய் தமிழுக்கு! துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே" – பாவேந்தர் பாரதிதாசன்